00011

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 5

**SNU 5535 – விசேட தேவைகள் சார் கல்விக்கான உளவியல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 21.10.2023 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 12.30

பகுதி **I** இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

## பகுதி – I

1. உள்ளடங்கல் வகுப்பறையிலுள்ள ஓர் ஆசிரியருக்கு கல்வி உளவியலின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

2. குழந்தை தொடர்பான ஆய்வு முறையில் வினாக்கொத்தைப் பயன்படுத்தலின் தலா **இரண்டு** (02) பலங்கள் மற்றும் பலவீனங்களைக் குறிப்பிடுக.

3. "வளர்ச்சி" மற்றும் "விருத்தி" ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை **இரண்டு** (02) உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

4. ஒரு பிள்ளையின் வளர்ச்சி மற்றும் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** (02) காரணிகளைச் சுருக்கமாகக் கலந்துரையாடுக.

5. விசேட தேவைகளையுடைய பிள்ளைகளில் முழு ஆளுமையை விருத்தியாக்குவதற்கு அடிப்படையாக அமையக்கூடிய பெற்றோரியல் நடிப்பங்கைச் சுருக்கமாக விளக்குக.

6. விசேட தேவைகளையுடைய பிள்ளைகளின் மனவெழுச்சி விருத்தி தொடர்பாக ஆசிரியர்களின் நடிபங்கு யாவை என்பதை **மூன்று** (03) உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

7. மாக்ரட் மீட் (Margaret Mead) இன் கலாசாரக் கற்றற் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் கற்றலுக்கு வசதியளிக்கும் வகையில் பயன்படுத்தத் தக்க உபாயங்கள் **இரண்டினைக்** (02) கலந்துரையாடுக. உங்களது கருத்துக்கு உதவும் வகையில் தலா ஒரு (01) உதாரணத்தை முன்வைக்குக.

8. விசேட தேவையுள்ள பிள்ளைகளின் ஞாபக சக்தியை மேம்படுத்த உபாயங்களைப் பிரயோகம் செய்யும் போது நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் **ஐந்தினைப்** (05) பட்டியற்படுத்துக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** “சமநிலை ஆளுமை” என்பதால் நீர் கருதுவது யாது?

**(05 புள்ளிகள்)**

**ii.** விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் சமநிலை ஆளுமையை விருத்தி செய்வதன் அவசியத்தைச் சுருக்கமாக விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** ஏதாவதொரு ஆளுமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களிடத்தில் சமநிலை ஆளுமை விருத்திக்கு வசதியளிக்கும் வகையில் ஓர் ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய உபாயங்கள் **நான்கினைக்** (04) கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

10.

**i.** விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் கற்றல் கோட்பாடுகளை கற்பதன் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** ஏதாவதொரு கற்றற் கோட்பாட்டைத் தெரிவு செய்து அதன் அடிப்படைத் தத்துவங்களில் குறைந்தது **மூன்றை** (03) முன்வைக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** விசேட தேவைகளைக் கொண்டு மாணவர்களின் கற்றல் கற்பித்தற் செயன்முறையில் மேலே குறிப்பிட்ட தத்துவங்களின் பிரயோகம் தொடர்பில் ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

11.

**i.** உள்ளார்ந்த ஊக்கம் மற்றும் வெளிவாரியான ஊக்கம் ஆகியவற்றை இரண்டு (02) உதாரணங்களை முன்வைத்து வேறுபடுத்துக.

**(06 புள்ளிகள்)**

**ii.** விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் விருத்தியில் உள்ளார்ந்த ஊக்கலின் முக்கியத்துவத்தை ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

iii. மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விசேட தேவைகளையுடைய பிள்ளைகளின் கற்றல் மீதான ஊக்கத்தை மேம்படுத்தலில் ஆசிரியரின் நடிபங்கை ஆராய்க.

(08 புள்ளிகள்)

12.

i. தகவல் செயன்முறை மாதிரி (Information Processing Model) மற்றும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் அதன் பயன்பாட்டைச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. பொருத்தமான உதாரணங்களை முன்வைத்த குறுங்கால நினைவகம் மற்றும் நீண்ட கால நினைவகம் ஆகியவற்றை வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

iii. விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் ஞாபகசக்தியை மேம்படுத்தப் பிரயோகிக்கக் கூடிய **ஆறு** (06) உபாயங்கள் பற்றி ஆராய்க.

(12 புள்ளிகள்)

13.

i. வளரிளமைப்பருவ விருத்திக்கட்டத்துடன் தொடர்புடைய பண்பியல்புகள் **நான்கினை** (04) விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. "வளரிளம்பருவம் அதிக அழுத்தம் மற்றும் கோபத்தை வெளிப்படுத்தும் பருவமாக அறியப்படுகின்றது. இப்பருவத்தினர் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றார்கள்"
விசேட தேவைகளையுடைய வளரிளம்பருவத்தினர் எதிர்கொள்ளும் இவ்வாறான பிரச்சினைகள் மற்றும் இடர்பாடுகள் **ஐந்தினைப்** (05) பற்றிக் கலந்துரையாடுக.

(07 புள்ளிகள்)

iii. விசேட தேவைகளைக் கொண்ட வளரிளம்பருவத்தினருக்கு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இடர்பாடுகளை இழிவளவாக்குவதற்கு அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியரின் உதவிகள் தேவைப்படலாம்.
இப்பிரச்சினை தொடர்பில் உங்களது நிலைப்பாட்டை உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

14.

i. பரிசோதனை சார் மற்றும் பரிசோதனை சாரா பிள்ளை ஆய்வு முறைகளின் வேறுபாடுகள் **மூன்றினைக்** (03) குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)